நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தில்லி கூட்டுறவு அங்காடிகளில் வெங்காயம் கிலோ ரூ.20**

First Published : 07 Sep 2011 04:19:24 AM IST



புது தில்லி, செப். 6: வெங்காயத்தை கிலோ ரூ. 20-க்கு விற்கும்படி தில்லியில் உள்ள தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை நிறுவன மற்றும் தேசிய நுகர்வோர் கூட்டுறவு நிறுவன அங்காடிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

வெங்காயத்தின் விலை உயர்ந்து வருவதையொட்டி மானிய விலையில் வெங்காயத்தை விற்க அரசு இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

தில்லியில் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை நிறுவனத்துக்கு 6 அங்காடிகளும், தேசிய நுகர்வோர் கூட்டுறவு நிறுவனத்துக்கு 15 அங்காடிகளும் உள்ளன.

உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சர் கே.வி.தாமஸ் தலைமையில் திங்கள்கிழமை மாலை நடந்த கூட்டத்துக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 07 Sep 2011 02:46:33 AM IST

சென்னை, செப்.7: தமிழகம், புதுவையில் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை, இரவு நேரங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்யும். சென்னையில் அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**9-ல் ஜப்பானிய காடை வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி**

First Published : 06 Sep 2011 11:17:12 AM IST

காஞ்சிபுரம், செப். 5: காஞ்சிபுரம் ஏனாத்தூர் உழவர் பயிற்சி நிலையத்தில் ஜப்பானிய காடை வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி செப்டம்பர் 9-ம் தேதி நடைபெறுகிறது.

÷இது குறித்து இப் பயிற்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் ம.ந.சுந்தரராமன் வெளியிட்ட அறிக்கை:

÷ஜப்பானிய காடை வளர்ப்பு தமிழ்நாட்டில் பிரபலமாக வரும் ஒரு எளிய தொழில். குறைந்த முதலீட்டில் குறைந்த இடத்தில் ஜப்பானிய காடைகளை வளர்க்கலாம். காடைகள் எந்த ஒரு தட்பவெட்ப நிலையிலும் நன்கு வளரக் கூடியன.

÷இத் தொழிலில் குறைந்த மூலதனத்துடன் சிறந்தப் பயிற்சி பெற்ற யாவரும் ஈடுபடலாம். காடைகள் பெரும்பாலும் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன.

÷ஜப்பானிய காடை 6 வார காலத்தில் விற்பனைக்கு தயாராகி வருகின்றன. காடை இறைச்சியில் அதிக புரதமும், குறைந்த அளவு கொழுப்பும் இருப்பதால் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஏற்ற உணவாகும்.

÷ஜப்பானிய காடை வளர்ப்பு பற்றிய ஒரு நாள் இலவசப் பயிற்சி செப்டம்பர் 9-ம் தேதி ஏனாத்தூரில் அமைந்துள்ள உழவர் பயிற்சி மையத்தில் அளிக்கப்படும்.

÷பயிற்சியில் பங்கு பெற ஆர்வமுள்ள ஆண், பெண் மற்றும் உழவர்கள் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாலம்.

÷தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பேராசிரியர் மற்றும் தலைவர், உழவர் பயிற்சி மையம், ஏனாத்தூர், காஞ்சிபும்-631 561. தொலைபேசி எண்: 044-27264019, கைப்பேசி: 9940308012.

**நெல் பயிரில் பூச்சி நிர்வாகம்: விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 06 Sep 2011 03:17:22 PM IST

தஞ்சாவூர், செப். 5: திருவையாறு பகுதிகளில் விவசாயிகளுக்கு நெல் பயிரில் பூச்சி நிர்வாகம் குறித்த பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

தஞ்சாவூர், காட்டுத்தோட்டத்தில் உள்ள மண், நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், நபார்டு வங்கி நிதியுதவியுடன் திருவையாறு, மகாராஜாபுரம், விளாங்குடி, புனவாசல், திருப்பழனம் ஆகிய ஐந்து இடங்களில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது. பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் மதிராஜன், நோயியல் துறை உதவிப் பேராசிரியை சித்ரா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**"பருத்தி விலை அதிகரிக்க வாய்ப்பில்லை'**

First Published : 06 Sep 2011 01:04:52 PM IST

திருவண்ணாமலை, செப். 5: பருத்தி விலை அதிகரிக்க வாய்ப்பில்லை என வேளாண்மை வணிகத்துறையின் துணை இயக்குநர் மா.சண்முகம் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பது:

தமிழகத்தில் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை பருத்திக்கு விலை அதிகமாக இருக்கும். ஆனால், நடப்பாண்டு விலை குறைந்துள்ளது. மின் தட்டுப்பாடு, நீர் மாசுபடுதல், பஞ்சாலைகள் வேலைநிறுத்தம், அதிக கையிருப்பு போன்றவையே இதற்கு காரணங்களாகும்.

உலக அளவில் பஞ்சு, பருத்தி, நூலுக்கு விலை மிகவும் குறைந்துள்ளது. சென்ற ஆண்டைப் போலவே நமது மாநிலத்தில் நடப்பாண்டும் 1.30 லட்சம் எக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு, 5 லட்சம் பொதிகள் வரை உற்பத்தி ஆகும் எனத் தெரிகிறது.

பருத்தி ஆகஸ்ட் மாதத்தில் விதைக்கப்பட்டு, பிப்ரவரி மாதத்தில் அறுவடைக்கு வரும். தேசிய வேளாண்மை புதுமை திட்டத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி தகவல் சந்தை மையம், திருப்பூர் பருத்தி சந்தையின் 15 ஆண்டு சந்தை விலைகளை ஆராய்ந்தது. மேலும் வர்த்தகர்களிடமும் ஆய்வு செய்தது. இதன்படி நீண்ட இழைப்பருத்தி ரகங்கள் விலை நவம்பர் 2011 முதல் மார்ச் 2012 வரை குவிண்டாலுக்கு ரூ.3000 முதல் ரூ.3500 வரை இருக்கும் என தெரியவருகிறது.
இப்போதைய சந்தை நிலவரப்படி, 4 முதல் 6 மாதங்களுக்கு பருத்தியின் விலை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவே ஆகும் என்றார் சண்முகம்.

தமிழகத்தில் இயற்கையாக பரவிவரும் ஆடுதுறை 45 நெல்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,00:00 IST




காஞ்சிபுரம் மாவட்டம் மாம்பாக்கம் கொளத்தூரில் விவசாயம் செய்து வருபவர் கே.லோகு. இவர் நெல் சாகுபடியில் வல்லுநர். எப்போதும் திறமையாக நன்கு தேர்ந்தெடுத்த நெல் ரகங்களை இவர் சாகுபடி செய்வது வழக்கம். கொளத்தூர் பகுதியில் நீர்வளம் சிறப்பாக இருப்பதால் விவசாயம் சிறப்பாக செய்யப் படுகிறது. இப்பகுதியில் நெல் விவசாயம் மூன்று பட்டங்களில் செய்யப்படுகிறது. சொர்ணவாரிப் பட்டத்தைத் தொடர்ந்து சம்பா மற்றும் நவரைப் பட்டங்களில் நெல் விவசாயம் செய்யப்படுகின்றது. போட்டி மனப்பான்மையில் விவசாயிகள் சிறப்பாக நெல் சாகுபடியை செய்து வருகின்றனர்.

கே.லோகு சொர்ணவாரிப் பட்டத்தில் ஆடுதுறை 43 ரகத்தை சாகுபடி செய்துவந்தார். இப்பயிரில் லாபம் எடுத்துவந்தாலும் ஆடுதுறை43 ரகத்தில் கோடையில் அதிக உஷ்ணத்தால் கதிரில் பால் பிடிக்கும் தருணத்தில் பால் சிதறி கருக்காய் அதிகமாக விழ ஆரம்பிக்கின்றது. அதனால் மகசூல் ஏக்கரில் 20 மூடைதான் கிடைத்தது. கோடை சற்று குறைவாக இருக்கும்போது நல்ல மகசூல் கிடைப்பதுண்டு. இதுசமயம் லோகுவிற்கு ஆடுதுறை45 என்ற நெல் ரகத்தை விவசாயிகள் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். ஆடுதுறை 45 ரகமும் ஆடுதுறை 43 போல் மிகவும் சன்னமான நெல்லினைக் கொண்ட ரகமாகும். இந்த பயிரை சொர்ணவாரியில் சாகுபடி செய்ய நினைத்து 2011ம்வருடம் மே மாதம் சித்திரைப் பட்டத்தில் ஆடுதுறை 45 ரகத்தினை அரும்பாடுபட்டு ஒரு ஏக்கரில் விவசாயி லோகு சாகுபடி செய்தார். பயிர் மிக செழிப்பாக வளர்ந்ததோடு அல்லாமல் வாளிப்பான கதிர்கள் வந்து பயிரைப் பார்த்தவர்கள் கவனத்தை

ஈர்த்தது. பார்த்தவர்கள் எல்லாம் நல்ல மகசூல் கிடைக்கும் என்று கூறினார்கள். கதிர்கள் மிக சிறப்பாக வந்ததோடல்லாமல் நெல் மிக சன்னமாக இருந்தது அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. பயிர் இவ்வாறு வளர்ந்து கொண்டிருக்கும்போது லோகு மிகப்பெரிய வியாபாரிகளைக் கூட்டி வந்து தனது பயிரைக் காட்டி என்ன விலை கிடைக்கும் என்ற கேட்டார். வியாபாரிகள் முதலில் எந்த கருத்தையும் கூறவில்லை. இருந்தாலும் ஒரு வியாபாரி சில நெல்மணிகளை எடுத்து கையில் தேய்த்து அரிசியை எடுத்து வைத்துக்கொண்டார். ஆனால் கருத்து ஒன்றும் சொல்லவில்லை.

லோகு வியாபாரியின் கருத்தை தெரிந்துகொள்ள பொறுமையாக இருந்தார். ஒரு வாரம் கழித்து வந்த வியாபாரி லோகுவிடம், "உன் நெல் மிக சன்னமாக இருந்தாலும் அரிசி பச்சைக்கு வராது இருந்தாலும் வெண் புழுங்கலுக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது,' என்றார். என்ன விலை கொடுப்பீர்கள் என்று கேட்டதற்கு கிலோவிற்கு ரூ.8.50தான் கொடுப்பேன் என்றார். விவசாயி லோகு ரூ.9 கொடுங்கள் என்று கேட்டார். வியாபாரி மறுக்கவே வியாபாரி சொன்ன விலையே லோகு ஏற்றுக்கொண்டார்.

இந்த சமயத்தில் லோகு தனது கிராமத்தில் உள்ள ஆடுதுறை 43 ரகத்தை சாகுபடி செய்த விவசாயிகளை சந்தித்து உங்கள் பகுதியில் நெல் விலை விவரம் எப்படி என்று கேட்டார். வியாபாரிகள் கிலோவிற்கு ரூ.9 தருவேன் என்று சொன்னாலும் எங்கள் ஆடுதுறை 43 பயிர் எதிர்பார்த்த மகசூல் கொடுக்கவில்லை. ஏனெனில் நெல் மகசூலில் அதிகம் கருக்காய் போனதோடு கருப்பு நெல்கள் அதிகம் விழுந்துவிட்டன. விவசாயி லோகு மனதை திடப்படுத்திக் கொண்டு வந்த லாபம் வரட்டும் என்று தீர்மானம் செய்துகொண்டு தனது வயலில் அறுவடையை தயார்செய்ய ஆட்களை ஏற்பாடு செய்ய சென்றார்.

விவசாயி லோகு தனது அறுவடையை வெற்றிகரமாக செய்து முடித்தார். இப்பகுதி விவசாயிகள் லோகுவிற்கு என்ன மகசூல் வரும் என்று தெரிந்துகொள்ள ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர். லோகுவிற்கு ஏக்கர் சாகுபடி செலவு ரூ.10,036 ஆனது.

லோகுவிற்கு அறுவடையில் 25 மூடை மகசூல் கிடைத்தது (மூடை 80 கிலோ). ஒரு கிலோ ரூ.8.50 வீதம் ஒரு மூடை விலை ரூ.680.00. 25 மூடைகள் விலை ரூ.17,000. சாகுபடி செலவு ரூ.10,036 போக நிகர லாபம் ரூ.6,964 கிடைத்தது. வைக்கோல் வரவு ரூ.1000. மொத்த வரவு ரூ.7,964. விவசாயி லோகு சாகுபடியில் திருப்தி அடைந்தார். மேலும் ஆடுதுறை 45 ரகத்திற்கு ஆடுதுறை 43 ரகத்தைவிட அதிக மகசூல் திறன் உள்ளதை தெரிந்துகொண்டு தொடர்ந்து ஆடுதுறை 45 ரகத்தை சாகுபடி செய்யலாம் என்ற எண்ணத்திற்கு அனைவரும் வந்தனர். இந்த ரகம் மேலும் பரவுவதற்கு விவசாய இலாகா அதிகாரிகள் ரகத்தின் விதையை கொடுத்து உதவுவது குறிப்பிடத்தக்கது. ஆடுதுறை 45 தமிழகத்தில் இயற்கையாகவே பரவிவருகிறது.-எஸ்.எஸ்.நாகராஜன்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,00:00 IST

**செம்மை நெல் நடவுக்கேற்ற நடவு இயந்திரம்**: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் குமுளூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செம்மைநெல் நடவு செய்வதற்கான இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட, நமது நாட்டில் கிடைக்கும் யான்ஜி நெல் நடவு இயந்திரத்தில் பற்சக்கரங்களை 24 செ.மீ. பயிருக்கு பயிர் இடைவெளி வரும் வண்ணம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. நெல் நாற்றை எடுத்து நடவு செய்யும் விரல்கள் அமைப்பு மாற்றம் செய்யப்பட்டு 1-2 நாற்றுகளை நடவு செய்யும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நெல் நடவு செய்யும் இயந்திரம் 24x24 செ.மீ. இடைவெளியில் நாற்றை நடவு செய்யும். ஒருமுறை முன்னோக்கி செல்லும்போது 8 வரிசை நடவு செய்துவிட்டு, திரும்பி அடுத்த சாலில் நடவு செய்யும்போது சதுர முறையில் நடவு செய்யும் இடத்தைக் குறிக்கும் வண்ணம் வரிசைக் குறிகள் இயந்திரத்தின் வலது, இடது திசைகளில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறிகளின் குறியீட்டை சரியான இடத்தில் அமைத்து சதுர நடவுமுறை செய்யலாம். நடவு செய்யும்போது இயந்திரத்துடன் நாற்றுக்களை எடுத்துச்செல்லும் வண்ணம் 8 பாய் நாற்றுக்களை வைக்க அமைப்பு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. பாய் நாற்றங்கால் முறையில் சிறிது கவனத்துடன் நாற்றுக்களை பராமரிக்க வேண்டும். ஒரு ஏக்கரில் நடவு செய்ய 2 மணி நேரம் ஆகும்.

**செம்மை நெல் சாகுபடிக்கேற்ற அடையாள கைக்கருவி**: செம்மை நெல் சாகுபடியில் அதிக இடைவெளியில் சதுரவடிவ நடவுமுறை முக்கியமான கோட்பாடாகும். சதுர நடவில் பயிருக்கு தேவையான காற்றோட்டம் கிடைக்கிறது. மேலும் களைக்கருவியை இரண்டு திசைகளிலும் பயன்படுத்துவதற்கு ஏதுவான முறை. செம்மை நெல் சாகுபடியில் சதுர நடவை மேற்கொள்ள அடையாளக் குறியிடப்பட்ட கயிறு (25x25செ.மீ.) பயன்படுத்துகின்றனர். இந்த முறையில் ஒரே திசையில் மட்டுமே வரிசை நடவு அமைகிறது. இதனால் களைக்கருவியை இரண்டு திசைகளிலும் பயன்படுத்த இயலாததால் பயிரின் தூர்கட்டும் திறன் குறைகிறது. இதைத் தவிர்க்க உருளும் அடையாளக்கருவி (25x25 செ.மீ.) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அடையாளக் கருவியை வயலில் உருட்டும்போது தொடர்ச்சியான சதுர வடிவ அமைப்பை அடையாளத்துடன் ஏற்படுத்துகிறது. குறியீடு உள்ள இடத்தில் நாற்றுக்கள் நடப்படுவதால் சீராகவும், வேகமாகவும் சதுர முறையில் நடவு செய்ய இயலும். (தகவல்: பெ.தனஞ்செழியன், சோ.ரதிக்கண்ணு, அ.சுரேந்திரகுமார், (1) 3, பண்ணை இயந்திரவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. (2)

தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் நகர், 99767 72343)
-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**சின்னார் 20 - புதிய ரக நெல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,00:00 IST



ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதியில் கீழமானங்கரை கிராமத்தில் லேட். சின்னார் என்ற விவசாயி ஒரு புதிய நெல்ரகத்தை அதே கிராமத்தில் உள்ள புஷ்பம் என்பவர் உதவியுடன் உருவாக்கியுள்ளார். இந்த நெல் 110-115 நாட்கள் வயதுஉடையது. நெல் கத்தரி ஊதா கலரில், சாயாத நெல் வகையைச் சேர்ந்தது.

**புதிய நெல் ரகம் உருவான வரலாறு**: 7 வருடங்களுக்கு முன்னர் புஷ்பம் என்ற விவசாயி முதுகுளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் எடிடி 36 என்ற நெல் ரக விதையை வாங்கிக் கொணர்ந்து புரட்டாசி மாதம் வயலில் விதைத்தார். நெல் முளைத்து பயிரானது. அச்சமயம் நெல்லில் களை எடுக்க முற்பட்டார். ஒரு பயிர் மட்டும் கத்தரி ஊதா கலரில் களைச்செடி போன்று தென்பட்டது. இது களைச்செடி என்று பிடுங்க முற்பட்ட சமயம் நெல்மணி போன்ற கதிரும் தென்பட்டது. இந்த நெல் பயிரை பார்வையிட்ட சின்னார் என்ற பக்கத்து தோட்ட விவசாயி இதனை பிடுங்கிச்சென்று அவருடைய வயலில் நட்டு தொடர்ந்து கண்காணித்து வந்தார். ஆரம்பத்தில் கத்தரி கலரில் இருந்த பயிரானது ரோஜா நிறத்தில் மாறியது. நெல்லின் மணிகள் சற்று நீளம் அதிகம் கொண்டதாக இருந்தன. இதன் மணிகளை தனியாக அறுவடை செய்து அடுத்த பட்டத்தில் விதைத்தார். இவ்வாறாக பிரித்து எடுத்த நெல்லை "நாதன்' என்பவர் ஆலோசனைப்படி தன்னுடைய பெயரிலேயே சின்னார் 20 என்று பெயரிட்டார். இதில் 20 என்பது 2000/2004 வருடத்தைக் குறிக்கும். அதாவது 20ம் நூற்றாண்டு என்பதைக்குறிக்க இவ்வாறு பெயரிட்டார். இந்த நெல்லின் நிறத்தையும் நீண்ட மணிகளையும் பார்த்த உள்ளூர் விவசாயிகள் அதிசயப்பட்டு தாங்களும்

பயிரிடமுற்பட்டனர். இவ்வூரில் புஷ்பம் என்பவரும் மற்ற விவசாயிகளும் இந்த நெல்லை தங்கள் வயலில் விளைவித்து நல்ல பலன் கண்டனர். இதனால் இந்த ரகம் கீழமானங்கரை மற்றும் பக்கத்து கிராமங்களிலும் உள்ள விவசாயிகளால் சுமார் 150 ஏக்கர் நிலங்களுக்கும் மேலாக பயிர் செய்யப்படுகிறது.

**சின்னார் நெல் ரகத்தின் சிறப்பு தன்மைகள்**: நெற்பயிர் வளரும் சமயம் கத்தரி ஊதா கலரில் காணப்படும். அறுவடை செய்யும் போது ரோஜா கலரில் மாறிவிடும். நெல்லின் உயரம் சுமார் 88 செ.மீ. கதிரின் நீளம் 22 செ.மீ. ஒரு பயிரில் 19-30 தூர்கள் உள்ளன. இதில் கதிர்பிடிக்கும் தூர்கள் 11 வரை உள்ளன. இது 115 நாட்களில் அறுவடை ஆகும். ஒரு கதிரில் 85-100 நெல்மணிகள் காணப்படும். 1000 நெல்மணிகளின் எடை 25 கிராம் ஆகும். இந்த நெல் ரகம் சாயாது. ஏக்கருக்கு 40-44 மூடைகள் விளைச்சல் கிடைக்கும்.

**இந்த நெல் ரகம் பரவி உள்ள ஊர்கள்**: இந்த நெல்லின் சிறப்பம்சங்களை கேள்விப்பட்டு பக்கத்து ஊரில் உள்ள விவசாயிகள் இந்த நெல் ரகத்தை விதைக்காக கூடுதல் விலைகொடுத்து வாங்கிச் செல்கின்றனர். இந்த நெல் கீழ்க்கண்ட ஊர்களில் பரவலாக பயிர் செய்யப்படுகின்றன.

1. தேரூர்வெளி, 2. கீழப்பானூர், 3. உத்தரகோசமங்கை, 4. சாத்தான் குளம், 5. கமுதி, 6. பொதிகுளம், 7. முதுகுளத்தூர், 8. குமாரகுறிஞ்சி, 9. பேரையூர். இந்தரகம் இப்போது சிவகங்கை மாவட்டத்திலும் பரவ ஆரம்பித்துள்ளது. இந்த நெல் ரகத்தை மூடைக்கு ரூ.100 அதிகம் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர். இதில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் தன்மை குறைவு என்று கூறுகின்றனர். தொடர்புக்கு: புஷ்பம், 97508 45600, விவேகானந்தன் - 0452-238 0082, 238 0943.

-கே.சத்யபிரபா, உடுமலை.

**ஏப்ரல்-ஆகஸ்ட் மாத காலத்தில்நாட்டின் காபி ஏற்றுமதி 29 சதவீதம் வளர்ச்சி**

செப்டம்பர் 07,2011,00:16



கொச்சி:நாட்டின் காபி ஏற்றுமதி, நடப்பு 2011-12ம் நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான ஐந்து மாத காலத்தில், 1 லட்சத்து 68 ஆயிரத்து 94 டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 29 சதவீதம் (1 லட்சத்து 30 ஆயிரத்து 48 டன்) அதிகமாகும்.இதே காலத்தில், ஏற்றுமதி செய்யப்பட்ட காபியின்

விலை, டன்னுக்கு, 37 சதவீதம் அதிகரித்து, அதாவது, 99 ஆயிரத்து 271 லிருந்து, 1 லட்சத்து 35 ஆயிரத்து 737 ரூபாயாகஉயர்ந்துள்ளது என, காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஐந்து மாத காலத்தில், மதிப்பு அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 77 சதவீதம் வளர்ச்சி கண்டு, 1,291 கோடியிலிருந்து, 2,282 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.நடப்பு 2011ம் ஆண்டு காலண்டர் ஆண்டில், ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான எட்டு மாத காலத்தில், காபி ஏற்றுமதி, 34 சதவீதம் அதிகரித்து, 2லட்சத்து 517 டன் என்ற அளவிலிருந்து, 2 லட்சத்து 68 ஆயிரத்து 169 டன்னாக உயர்ந்துள்ளது.

நடப்பு 2010 - 11ம் காபி பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர்), ஆகஸ்ட் வரையிலான, 11 மாத காலத்தில், காபி ஏற்றுமதி 36 சதவீதம் அதிகரித்து, 2 லட்சத்து 45 ஆயிரத்து 61 டன்னிலிருந்து, 3 லட்சத்து 34 ஆயிரத்து 31 டன்னாக உயர்ந்துள்ளது.நம் நாட்டிலிருந்து, இத்தாலி, ஜெர்மன், ரஷ்யா,பெல்ஜியம் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு அதிகளவில் காபி ஏற்றுமதி ஆகிறது என, காபி வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.

**பப்பாளியில் கூடுதல் மகசூல்: சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,02:40 IST

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி அடுத்த மகாராஜகடை சுற்றுவட்டார பகுதியில், சொட்டு நீர் பாசனம் மூலம் பப்பாளி சாகுபடி செய்வது அதிகரித்துள்ளது. சர்க்கரை நோய் மற்றும் வயிறு சம்மந்தமான நோய்களை குணப்படுத்தும் மருத்துவ குணம் உள்ள பப்பாளி பழத்துக்கு, பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கும். நாளுக்கு நாள் பப்பாளி பழத்தின் தேவை அதிகம் உள்ள நிலையில், வீரிய ஒட்டுரக பப்பாளி செடிகளை விவசாயிகள் நிலங்களில் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டிவருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மகாராஜகடை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகள், நிலங்களில் சொட்டு நீர் பாசனம் மூலம் வீரிய ஒட்டுரக பப்பாளி செடிகளை சாகுபடி செய்துள்ளனர். ஒரு விதை எட்டு ரூபாய்க்கு வாங்கும் விவசாயிகள் ஒரு ஏக்கரில் ஆயிரம் செடிகளை நட்டு வைத்து வளர்க்கின்றனர். 6 மாதத்திற்கு பின், அறுவடைக்கு வரும் பப்பாளி காய்களை மொத்த வியாபாரிகள் மூலம் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஜூஸ் பாக்டரி மற்றும் சென்னை, கர்நாடகா மாநிலம் பெங்களூரு மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். பப்பாளி சாகுபடியில் கூலி ஆட்கள் தேவை குறைவாக உள்ளது. மேலும் மற்ற பயிர்களை போலவே பப்பாளியும் சொட்டுநீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்படுவதால் தண்ணீர் பிரச்சனை இல்லாமல் போகிறது. நெல், கரும்பு,வாழை, மஞ்சள் பயிர்களுக்கு அதிக

தண்ணீர் தேவைப்படும் நிலையில், பப்பாளி சாகுபடிக்கு குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படுவதால், விவசாயிகளுக்கு சாதகமாக உள்ளது. இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பல விவசாயிகள் பப்பாளி சாகுபடிக்கு மாறியுள்ளனர். இது குறித்து மகாராஜகடையை சேர்ந்த பப்பாளி சாகுபடி செய்துள்ள விவசாயி சோமசுந்தரம் கூறியது: கடந்த காலங்களில் கிணற்று பாசனம் மூலம் கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துவந்தோம். காட்டு விலங்குகள் அட்டகாசம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, ஆண்டுக்கு ஆண்டு நஷ்டமே மிஞ்சியது. இதனால், கடந்த ஆண்டில் இருந்து நான்கு ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் மூலம், பப்பாளி செடிகளை வளர்த்து வருகிறோம்.ஆறு மாதத்தில், ஒரு ஏக்கரில் வாரத்துக்கு ஒரு முறை இரண்டு டன் பப்பாளி உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு கிலோ, 4 ரூபாய் என்ற அளவில் மொத்த விற்பனையாளகர்கள் தோட்டத்திலே வந்து காய்களை எடுத்து செல்கின்றனர். இதன் மூலம் வாரத்துக்கு ஏக்கருக்கு, 8,000 ரூபாய் கிடைக்கிறது. செடிகளை பராமரிக்கும் முறையை பொறுத்து விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. கடந்த ஆண்டு மகாராஜகடை பகுதியில், 25 ஏக்கரில் மட்டும் பப்பாளி சாகுபடி செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்து வருவதால், பல விவசாயிகளும் பப்பாளி சாகுபடிக்கு மாறியுள்ளனர். தற்போது மகாராஜகடை சுற்றுவட்டார பகுதியில் மட்டும், 200 ஏக்கருக்கு மேல் பப்பாளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஆதார விலை திட்டத்தில் கொப்பரை கொள்முதல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,00:16 IST

கோவை : ஆதார விலை திட்டத்தின் கீழ், தென்னை விவசாயிகளிடம் இருந்து கொப்பரை கொள்முதல் செய்வதற்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து கோவை கலெக்டர் கருணாகரன் வெளியிட்ட அறிக்கை: மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் கொப்பரைக்கு ஆதார விலை அறிவிக்கிறது. 2011ம் ஆண்டுக்கு, அரவைக் கொப்பரை தேங்காய் கிலோ ரூ.45.25 எனவும், பந்துக்கொப்பரை கிலோ ரூ.47.75 எனவும் நிர்ணயித்துள்ளது. ஏற்கனவே உள்ள வழிகாட்டி நெறிமுறையை பின்பற்றி, மேற்படி ஆதார விலையில் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துக்கு அனுமதி அளித்து ஜூலை 6ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு அனுமதிப்படி, மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் கொள்முதல் செய்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடப்பாண்டிலும் கொப்பரை கொள்முதலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சி கூட்டுறவு சங்க மையத்திலும், சூலூர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் செஞ்சேரி மலையடிபாளையம் மையத்திலும்

கொள்முதலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த 2009, 2010ம் ஆண்டுகளில் அடையாள அட்டை பெற்ற தென்னை விவசாயிகள், 2011ம் ஆண்டுக்கு வருவாய், வேளாண் துறையினரிடம் காட்டி புதுப்பித்துக்கொள்ள வேண்டும். புதிய அடையாள அட்டை கோரும் தென்னை விவசாயிகள், தங்கள் பகுதி வேளாண் உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம். அடையாள அட்டைகளை தங்கள் பகுதி கொள்முதல் மையங்களில் விவசாயிகள் பதிவு செய்ய வேண்டும். "முறைகேடுகள் இருக்கக்கூடாது' என்ற நோக்கில், கூட்டுறவு, வருவாய், வேளாண் மற்றும் வேளாண் வணிகத்துறையை இணைத்து, கொள்முதலுக்கான வழிகாட்டி நெறிமுறைகளை மாநில அரசு வகுத்துள்ளது. அதன்படி செல்லத்தக்க அடையாள அட்டை வைத்துள்ள தென்னை விவசாயிகளிடம் இருந்து "நேபெட்' தரம் அடிப்படையில் கொப்பரை கொள்முதல் செய்யப்படும். விவசாயிகள் தங்களது கொப்பரை தேங்காய்களை, எவ்வித இடையூறும் இன்றி, அரசு கொள்முதல் நிலையங்களில் பதிவு செய்து முன்னுரிமை அடிப்படையில், அரசு ஆதார விலைக்கு விற்று பயன் பெறலாம். இவ்வாறு, கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**ஈமு கோழி பண்ணை கணக்கெடுப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,00:39 IST

பொங்கலூர் : புற்றீசல் போல் பெருகி வரும் ஈமு கோழி பண்ணைகளை கணக்கெடுக்கும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. விவசாயிகளின் பெயர், முகவரி மற்றும் விவசாயிகளின் முதலீடு போன்ற விவரங்களை கால்நடைத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.பொங்கலூர், பல்லடம், காங்கயம், தாராபுரம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விவசாயி கள் சொந்தமாகவும், ஒப்பந்த அடிப்படையிலும் ஈமு கோழி பண்ணைகளை அமைத்து வருகின்றனர். சொந்த மாக வளர்க்கும் விவசாயிகளை விட, ஒப்பந்த அடிப்படையில் ஈமு கோழி வளர்க்கும் விவசாயிகளின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்துள்ளது.ஆறு கோழிகளை கொண்ட ஒரு பண்ணை ஒரு யூனிட் என்றழைக்கப்படுகிறது. ஒரு யூனிட்டுக்கு விவசாயிகளிடம் இருந்து ஒன்றரை லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு பண்ணையாளர்கள் ஈமு குஞ்சுகளை கொடுக்கின்றனர். ஈமுவுக்கு வழங்கப்படும் தீவனச்செலவு முழுவதையும் குஞ்சு வழங்கும் நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு விவசாயியும் நான்கைந்து யூனிட்கள் வரை வளர்க்கின்றனர். யூனிட் ஒன்றுக்கு ஒவ்வொரு மாதமும் பராமரிப்பு தொகையாக ஆறாயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆண்டு இறுதியில், போனஸ் மற்றும் தங்கக்காசு உள்ளிட்ட கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் அளிக்கப்படுகின்றன. இதை நம்பி பல விவசாயிகள், தங்களிடமுள்ள நகை மற்றும் நிலங்களை அடகு வைத்தும், கடன் வாங்கியும் ஈமு பண்ணைகளில் முதலீடு செய்து வருகின்றனர். தற்போது கிராமப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான பண்ணைகள் பெருகி வருகின்றன; எண்ணற்ற விவசாயி கள் முதலீடு செய்து வருகின்றனர். முதலீடு

செய்யப்படும் பணம் பாதுகாப்பானதா, வருவாய் ஒழுங்காக அரசுக்கு கணக்கு காட்டப்படுகிறதா என்பதை கண்டறியவும், முதலீடு செய்துள்ள விவசாயிகளின் பெயர், முகவரி உள் ளிட்ட தகவல்கள் கால்நடைத்துறை மூலம் மாவட்டம் முழுவதும் சேகரிக்கப்படுகிறது. இத்தகவல் சேகரிக்கப்பட்டு வருவாய்த்துறையினரிடம் ஒப்படைக்கப்படும்.

**சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் துறை வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,00:38 IST

உடுமலை : வேளாண்மை துறையில் பதிவு செய்துள்ள சிறு, குறு விவசாயிகள் மண் பரிசோதனைக்காக மாதிரிகளை வழங்குமாறு வேளாண் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். உடுமலை வட்டார வேளாண் விரிவாக்க மைய வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) திருமகள்ஜோதி அறிக்கை: அரசு அறிவித்துள்ள இரண்டாம் பசுமை புரட்சி திட்டத்தின் ஒரு பகுதியாக உடுமலை வட்டாரத்திலுள்ள சிறு, குறு விவசாயிகள் பதிவு செய்யும் பணி கடந்த ஒரு மாதமாக நடக்கிறது. இந்த தகவல்கள் தற்போது இன்டர்நெட்டில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. துறையில் பதிவு செய்துள்ள சிறு, குறு விவசாயிகள் தங்கள் விளைநிலத்தில் மண் மாதிரிகளை சேகரித்து வரும் செப்., 15ம் தேதிக்குள் உடுமலை வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.
ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்தனியாக மண் வளத்தை அறிந்து (பேரூட்டசத்து மற்றும் நுண்ணூட்ட சத்து) அதற்கேற்றார் போல் செயல்திட்டம் வகுத்து அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. மண் மாதிரி எடுக்கும் முறை: நெல், மக்காச்சோளம்,பயறு வகை போன்ற தானியப்பயிர்களுக்கு 15 செ.மீ., ஆழத்திலும், தென்னை, பழமரங்கள் போன்றவற்றிற்கு 2.5 அடி ஆழத்திலும் மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும். ஒரு விவசாயி ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சம் ஒரு மாதிரி எடுக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்', என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குடிமங்கலம் பகுதியில் தென்னையில் மர்மநோய் தாக்குதல் வேகமாக பரவுகிறது**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,00:38 IST

உடுமலை : உடுமலை அருகே தென்னை மரங்களில் பரவி வரும் மர்ம நோய் தாக்குதலுக்கு நூற்றுக்கணக்கான மரங்கள் பாதிக்கப்பட்டு கருகியுள்ளன. நோயை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், கருகிய மரங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் விவசாயிகள்

கோரிக்கை விடுத்துள்ளனர். குடிமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான தென்னை பயிரிடப்பட்டுள்ளது. கொசவம்பாளையம், முத்துசமுத்திரம் போன்ற பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நத்தை புழு தாக்குதல் பரவி நூற்றுக் கணக்கான மரங்கள் கருகின. தற்போது, மூங்கில்தொழுவு பகுதியில் பரவி வரும் மர்ம நோய் விவசாயிகளிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது. இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள தென்னை மரங்களில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் மர்மநோய் தாக்குதல் தென்பட்டுள்ளது. முதற்கட்டமாக மரங்களின் ஓலைகளில் பச்சையம் குறைந்து மஞ்சள் நிறத்திற்கு மாறியுள்ளது. பின்னர் ஒவ்வொரு ஓலையாக கீழே விழுந்ததுடன், காய்ப்பிலுள்ள இளநீர் மற்றும் தேங்காய் ஆகியவை குலையுடன் கீழே விழுந்துள்ளது.படிப்படியாக மேற்பாகம் முழுவதும் வெற்றிடம் போல் மாறி, குருத்தும் காய்ந்து விடுவதால் மரம் முழுவதுமாக கருகியுள்ளது. பல ஆண்டுகள் வளர்த்த மரங்கள் குறுகிய நாட்களுக்குள் கருகியதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். விவசாயி மாசிலாமணி என்பவரது தோட்டத்தில் துவங்கிய இந்நோய் தாக்குதல் வேகமாக அருகிலுள்ள தோட்டங்களுக்கும் பரவியது. காய்ப்பு திறனிலுள்ள 15 ஆண்டுகளுக்கும் மேலான தென்னை மரங்கள் அடியோடு காய்ந்ததால் விவசாயிகள் கடும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். நோய் தடுப்பு நடவடிக்கைகள் தெரியாமல், பல ஆயிரம் ரூபாய் செலவிட்டு மரங்களின் வேர்களுக்கு விவசாயிகள் மருந்து கட்டி வருகின்றனர். இருப்பினும் நோய் தாக்குதல் கட்டுப்படவில்லை. இது குறித்து விவசாயிகள் தரப்பில் கூறியதாவது: மர்ம நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து தெரியவில்லை. பல ஆண்டுகள் வளர்ந்த மரங்களின் மேல்பகுதியில் தாக்குதல் துவங்குவதால் நோய் பரவுவது தெரிவதில்லை. ஓலைகள் நிறம் மாறி, காய்கள் கீழே விழும் போதுதான் மரத்தை நோய் தாக்குவது தெரிகிறது. மரங்கள் காய்வதால் பொருளாதார ரீதியாக கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. காய்ப்பிலுள்ள மரங்கள் கருகுவதால், விளைச்சல் கிடைப்பதில்லை. புதிதாக தென்னை நாற்றுகள் நடவு செய்து அவை காய்ப்பு திறனுக்கு வருவதற்கு ஐந்து ஆண்டுகளாகும்.வேளாண்துறை அதிகாரிகளிடம் இது குறித்து புகார் அளிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு நடத்தி சென்றுள்ளனர். நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து உடனடியாக இப்பகுதியில் ஆலோசனை முகாம் நடத்த வேண்டும். கருகிய மரங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றனர். மதிப்பிட முடியாது 15 ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ந்த தென்னை மரங்கள் திடீரென கருகும் போது அவற்றின் மதிப்பை மதிப்பிட முடியாது என விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. குறைந்தபட்சம் 40 ஆண்டுகள் வரை மரங்கள் காய்ப்பு திறனில் இருக்கும். ஆண்டிற்கு குறிப்பிட்ட தேங்காய் விளைச்சல் கிடைப்பதுடன், தென்னை மட்டை போன்றவையும் விவசாயிகளுக்கு வருமானம் அளிக்கும். கருகிய மரங்களுக்கு மாற்றாக நடப்படும் தென்னங்கன்றுகள் காய்ப்பு திறனுக்கு வர ஐந்து ஆண்டுகள் பிடிக்கும். அதுவரை வருவாய் பாதிப்பு ஏற்படுவதால், இழப்பீட்டு தொகை அதிகமாக வழங்க வேண்டும் என கோரிக்கை விடப்படுகிறது.

**பட்டு புழு வளர்ப்புக்கு ரூ.1.30 லட்சம் மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,00:54 IST

கூடலூர் : தமிழக பட்டு வளர்ச்சி துறையின் கிரியா உக்கி திட்டத்தின் கீழ், சுய உதவி குழுக்களுக்கு பட்டு புழு வளர்ப்பு ஊக்குவிப்பு குறித்த பயிற்சி கூட்டம் புனித மரியன்னை பள்ளியில் நடந்தது. உதவி ஆய்வாளர் லிங்கராஜ் வரவேற்றார். நிகழ்ச்சியில், பட்டு வளர்ப்பு துறை மண்டல இணை இயக்குனர் (பொ) சந்திரசேகரன் பேசுகையில், ""பட்டு வளர்ப்பு விவசாய சார்ந்த தொழிலாக இருப்பதால் இதில் கிராம பகுதி மக்கள் ஈடுபட வேண்டும். 600 சதுர அடி பரப்பிலான செட் இருந்தால் பட்டு வளர்க்க முடியும். ஒரு ஏக்கர் நிலத்தில் 5,000 மல்பரி செடிகள் நடவு செய்து, அதனை மூன்று பிரிவாக பிரித்து மாதம் மூன்று முறை வருமானம் பெறலாம். ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து ஆண்டுக்கு 3 லட்சம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். இந்தியாவில் ஆண்டுக்கு 26 மெட்ரிக் டன் பட்டு தேவையுள்ளது. இதனை பூர்த்தி செய்ய முடியாததால் சீனாவிலிருந்து பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது. தேவை அதிகம் இருப்பதால் பட்டுக்கு விலை குறையும் என்ற கவலைப்பட தேவையில்லை. விவசாயிகள் விரைவாக முன்னேற இத்தொழில் பெரும் உதவியாக இருக்கும். பட்டு வளர்ச்சியை ஊக்குவிக்க அரசு 1.30 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்குகிறது," என்றார். கூடலூர் சிண்டிகேட் வங்கி கிளை மேலாளர் கணேசன் பேசுகையில் , ""பட்டு வளர்ப்பு தொழில் தனிப்பட்ட வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். இம்முயற்சிக்கு தேவையான கடனுதவி வழங்கப்படும்," என்றார். கூட்டத்தில், உடுமலை பகுதி உதவி இயக்குனர் பன்னீர்செல்வம், ஆய்வா ளர்கள் பிரின்ஸ் மோகன் (மசகல்) ராஜமாணிக்கம் (மசினகுடி), யு.எஸ்.எஸ். ஏ., சுய உதவி குழு ஒருங்கிணைப்பாளர் பாக்கியவதி சுய உதவி குழு பெண்கள் திரளாக கலந்து கொண்டனர். பட்டு வளர்ப்பு தொழில் நுட்ப உதவியாளர் இஜாஸ் நன்றி கிறினார்.

**நெல் பயிரில் களர் உவர் நிலத்தைசீர்திருத்தம் செய்ய 50 சதவீதம் மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,02:26 IST

செய்துங்கநல்லூர்:நெல் பயிரில் களர் உவர் நில சீர்திருத்தம் செய்ய அரசு 50 சதவீத மானியம் தருவதாக வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

விவசாய நிலங்களில் உள்ள மண்வளம் குறைந்து களர் உவர் நிலமாகி மகசூல் குறையும் நிலையில் உள்ள விவசாயிகளுக்கு தங்கள் நிலங்களை சீரமைக்க அரசு புதிய திட்டத்தை மானியத்துடன் அறிவித்துள்ளதாக கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணப்பிள்ளை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது, தமிழக அரசின் புதிய திட்டமான களர் உவர் நில சீர்திருத்த திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

கருங்குளம் யூனியனில் நெல்பயிரில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ் நெல் பயிர் நிலத்தினை சீரமைக்க 50 சதவீத மானியத்தில் ஒரு ஏக்கருக்கு தக்கை பூண்டு வகை ரூபாய் ஆயிரத்து மூன்னூற்று ஐம்பதும், மண்மாதிரி எடுத்திட ரூபாய் நூற்று ஐம்பதும், வடிகால் வசதி செய்திட ரூபாய் ஆயிரத்து ஐநூறும், ஜிப்சம் விநியோகம் இரண்டு மெட்ரிக் டன் ரூ.7 ஆயிரத்திலும், சிங் சல்பேட் உர விநியோகம் 10 கிலோ ரூ.400, உயிர் உரங்கள் விநியோகம் 10 பாக்கெட் ரூ.100ம், விதை விநியோகம் மற்றும் உரங்கள் ரூ.ஆயிரத்து 500ம் வழங்கப்படுகின்றது. இதில் அரசு மானியம் ரூ.6 ஆயிரம் போக மீதி ரூ.6 அயிரம் விவசாயிகள் செலுத்த வேண்டும்.

விவசாய நிலத்தை சீரமைக்க விரும்பும் விவசாயிகள் திட்டத்தினை செயல்படுத்தி வளம் பெற கேட்டுக் கொள்கிறேன். மேலும் விபரங்களுக்கு மற்றும் ஆலோசனைகளை செய்துங்கநல்லூரில் உள்ள கருங்குளம் யூனியன் அலுவலகம் வளாகத்தில் அமைந்துள்ள வேளாண்மை அலுவலகம் அல்லது தங்கள் பகுதிக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி பெற்றுக் கொள்ளலாம் இவ்வாறு கூறினார்.

**கால்நடைகளை பாதிக்கும் கல்லீரல் தட்டைப் புழுக்கள் கட்டுப்படுத்துவது குறித்த கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,02:17 IST

வேப்பேரி : கால்நடைகளை பெரிதும் பாதிக்கும், கல்லீரல் தட்டைப்புழுக்களை கட்டுப்படுத்துதல் குறித்த கருத்தரங்கம், சென்னையில் துவங்கியது.மாடுகள், செம்மறி, வெள்ளாடுகளுக்கு தட்டைப்புழு நோய் ஏற்படுகிறது. இவை, பித்தக்குழாய், கல்லீரலில் ஒட்டுண்ணிகளாக மாறி தங்கிவிடுவதால், பால் உற்பத்தி குறைதல் மற்றும் பாலில் கொழுப்புச்சத்தின் அளவு குறைதல், இனப்பெருக்க குறைபாடு ஆகியவை ஏற்படுகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்துதல் குறித்த கருத்தரங்கம், கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரியில் நடந்தது.கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய, தமிழக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை துணைவேந்தர் பிரபாகரன் பேசியதாவது:சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி ஒட்டுண்ணியியல் துறை, தமிழக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையின் நலக்கல்வி மையம், இங்கிலாந்து குயின்ஸ், அபெரிட்ஸ்வித், அலிகார் முஸ்லிம் பல்கலை ஆகியவை இணைந்து, இங்கிலாந்து உயிர்தொழில் நுட்பம் மற்றும் உயிரியல் ஆராய்ச்சி கூட்டமைப்பின் நிதியுதவியுடன், தட்டைப்புழுக்களை கட்டுப்படுத்துதல் குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகிறது.உணவு மற்றும் வேளாண்மைக்கு, கால்நடைகள் பெரிதும் பயன்படுவதால், அவற்றை பாதுகாக்க உலக அளவில், பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் முக்கிய அம்சமாக இக்கருத்தரங்கு விளங்கும்.இவ்வாறு அவர் பேசினார்.முன்னாள் துணைவேந்தர் ஞானபிரகாசம், இங்கிலாந்து

வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஆணையத்தின் தலைவர் ஜெமிகிரிப் உள்ளிட்ட ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

**வானிலை ஆய்வு மையம் வேளாண் பல்கலை தீவிரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,02:07 IST

ஆத்தூர்: தமிழகம் முழுவதும் தானியங்கி வானிலை மையம் அமைத்து, வெப்பநிலை, மழையளவு, காற்றின் ஈரப்பதத்தை அறிந்து, விவசாயிகளுக்கு தகவல் அளிக்கும் பணியில், வேளாண்மை பல்கலை ஈடுபட்டுள்ளது. புனேவில் உள்ள மத்திய வானிலை தலைமை ஆய்வு மையம் மூலம் அனைத்து மாநிலங்களிலும் மழை அளவு, வெப்பநிலை அறிந்து கொள்ள, தானியங்கி வானிலை ஆய்வு மையம் (ஆட்டோ மேட்டிக் வெதர் ஸ்டேஷன்) அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வேளாண்மை பல்கலை மூலம், 224 வட்டாரத்தில், தானியங்கி வானிலை ஆய்வு மையம், 13.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் அருகே ஏத்தாப்பூரில் உள்ள வேளாண் பல்கலை மரவள்ளி ஆராய்ச்சி மையம், கெங்கவல்லி நடுவலூர், ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி போன்ற பகுதிகளில், வானிலை ஆய்வு மையம் அமைத்து, விவசாயிகளுக்கு தகவல் அளித்து வருகிறது. இதுகுறித்து வேளாண்மை பல்கலை அலுவலர்கள் மற்றும் வேளாண்த்துறை உதவி இயக்குனர்கள் கூறியதாவது: வேளாண்மை பல்கலையின் ஆராய்ச்சி மையங்கள் சார்பில், 385 யூனியன்களில், 224 வட்டாரத்தில் தானியங்கி வானிலை ஆய்வு மையம் பயன்பாட்டில் உள்ளது. மீதம் உள்ள, 220 வட்டாரத்தில், இந்த மையம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகிறது, என்று கூறினர்.

**கரும்பு விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2011,22:42 IST

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் அடுத்த ஏனாதிமங்கலத்தில் கரும்பு விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடந்தது. கரும்பு அலுவலர் கோபிசிகாமணி தலைமை தாங்கினார். விவசாயிகள் முன்னேற்ற சங்க மாவட்ட செயலாளர் ரகோத்தமன், ஊராட்சி தலைவர் இந்திரா முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கரும்பு டன்னுக்கு 3 ஆயிரம் வழங்க வேண்டும், கடந்தாண்டு சப்ளை செய்த கரும்பிற்கு ஊக்கத்தொகையாக டன்னுக்கு 100 ரூபாய் வழங்க வேண்டும். வெட்டுகூலியை அரசே ஏற்க வேண்டும். கரும்பு டிராக்டர்களை ஆலை வளா

கத்திற்குள் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட 9 கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. வாகன உரிமையாளர்கள் சங்க தலைவர் சுப்ரமணி, முன்னாள் ஊராட்சி தலைவர் மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,900-2,930

### மணிலா பயறு

80 கிலோ கொண்ட மூட்டை 4,000-4,100

### கடலை எண்ணெய்

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 9,850-00

### கடலை புண்ணாக்கு

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,725-00

### தேங்காய் எண்ணெய்

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,981-00

### நல்லெண்ணெய்

குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 10,500-00
டின் (15கிலோ) 1,750-00

### விளக்கெண்ணெய்

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 11,300.00
15கிலோ டின் (வரிஉள்பட) 2,000-00

### சூரியகாந்தி எண்ணெய்

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,225.00

### ரீபைண்டு ஆயில்

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,635.00

### வனஸ்பதி

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,125.00

### பாமாயில்

10 கிலோ டின் (வரி தனி) 560-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,செப்.6-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,200 | 85.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,080 | 110.00 |
| துபருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 4,100 | 44.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 5,800 | 60.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,800 | 72.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (ஆவரை) | ரூ. 3900 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4000 | 42.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 2,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,000 | 54.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,900 | 41.00 |
| சர்க்கரை | ரூ. 3,100 | 32.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,செப்.5-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 7,030
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 7,311
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 10,045
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,561
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,545
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 10,826
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 15,185

## கோவை உழவர் சந்தை

கோவை,செப்.6-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | | | (கிலோவுக்கு) | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36-40 | | | |
| கத்தரிக்காய் | ரூ. | 12-18 | காலிப்பிளவர் | ரூ. | 18-20 |
| வெண்டைக்காய் | ரூ. | 10-12 | பொறியல் தட்டை | ரூ. | 12-16 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 7-9 | தேங்காய் | ரூ. | 10-13 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 8-10 | பட்டாணி | ரூ. | 100-110 |
| புடலை | ரூ. | 12-18 | கறிவேப்பிலை | ரூ. | 12-14 |
| பீர்க்கன்காய் | ரூ. | 16-21 | அகத்தி | ரூ. | 16-00 |
| சுரைக்காய் | ரூ. | 10-14 | வாழைக்காய் | ரூ. | 18-20 |
| பாகற்காய் | ரூ. | 10-15 | குடைமிளகாய் | ரூ. | 26-36 |
| கொத்தவரை | ரூ. | 15-14 | சாதா பீன்ஸ் | ரூ. | 28-32 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 40-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6-00 | கறிபீன்ஸ் | ரூ. | 22-24 |
| பீராக்காய் | ரூ. | 14-18 | புஸ்பீன்ஸ் | ரூ. | 32-42 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18-26 | காளான் | ரூ. | 80-150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20-18 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-14 |
| சின்னவெங்காயம் | ரூ. | 15-20 | மாங்காய் | ரூ. | 20-00 |
| பெரியவெங்காயம் | ரூ. | 17-19 | திராட்சை | ரூ. | 45-00 |
| இஞ்சி | ரூ. | 34-00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 17-20 |
| முருங்கைக்காய் | ரூ. | 12-14 | கொய்யா1கிலோ | ரூ. | 14-20 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 16-22 | மாதுளை1கிலோ | ரூ. | 95-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 25-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-17 |
| கருணைகிழங்கு | ரூ. | 40-00 | வரமிளகாய் | ரூ. | 100-140 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 25-00 | மாம்பழம் | ரூ. | 40-50 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 100-130 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-15 | சாத்துக்குடி | ரூ. | 28-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18-00 | நெல்லிக்காய் | ரூ. | 30-32 |
| முள்ளங்கி | ரூ. | 12-24 | ஆரஞ்சு | ரூ. | 75-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 25-27 | வெள்ளரி | ரூ. | 12-28 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 10-18 | புளி 1 கிலோ | ரூ. | 75-80 |
| நூல்கோல் | ரூ. | 16-18 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30-32 |
| கொத்துமல்லி | ரூ. | 18-22 | அவரை | ரூ. | 14-20 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16-18 | நிலக்கடலை | ரூ. | 24-26 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 | மக்காச்சோளம் | ரூ. | 12-20 |
| கலர்கோஸ் | ரூ. | 15-00 | | | |
| புதினா | ரூ. | 16-00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 28,200 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 28,700 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 29,700 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 14,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 12,000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9200 |
| கொப்பரை நாடன் | ரூ. 5800 |
| கொப்பரை ராசு | ரூ. 5750 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 5975 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ. 7900 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7300 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21,100 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 20,200 |
| ரப்பர் பால் | ரூ. 15,500 |
| காப்பி | ரூ. 10,500 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 2400 |
| இஞ்சி | ரூ. 1300 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,செப்.6-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,730 | 112.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1,220 | 74.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1270 | 82.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1240 | 80.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1030 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.180.00 | அதிகபட்சவிலை | ரூ.273.00 |
| சராசரி விலை | ரூ.158.58 | சராசரி விலை | ரூ.247.39 |
| குறைந்தபட்சவிலை | ரூ.151.00 | குறைந்தபட்சவிலை | ரூ.220.00 |

பட்டு நூல் ரூ.1,756

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 21,288.00 | 21,504.00 | 21,400.00 |
| ஒரு கிராம் | 2,661.00 | 2,688.00 | 2,675.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 65,160.00 | 70,950.00 | 70,000.00 |
| ஒரு கிராம் | 69.70 | 70.95 | 70.00 |

தினகரன்

**பற்றாக்குறையால் விலை உயர்வு வெங்காயம் ஏற்றுமதிக்கு மீண்டும் வருகிறது தடை**

பதிவு செய்த நாள் : 9/7/2011 1:2:31



புதுடெல்லி : வெங்காயம் விளைச்சல் குறைந்ததால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையால் விலை உயர்வை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு தொடங்கியுள்ளது. ஏற்றுமதி மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. தடை விதிக்கவும் பரிசீலிக்கிறது. நம்நாட்டில் வெங்காய உற்பத்தியில் மகாராஷ்டிரா முக்கிய பங்கு வகிக்கிறது. அங்கு இப்போது அதிக மழை காரணமாக வெங்காய பயிர்கள் நாசமாகி வருகின்றன. அதனால், உற்பத்தி 3 லட்சம் டன் வரை குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த வெங்காய ஏற்றுமதி அளவாகும். இந்த பற்றாக்குறை காரணமாக வெங்காயம் விலை மீண்டும் அதிகரிக்கும் அபாயம் நிலவுகிறது.

விலை உயர்வை தடுக்க வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை 5 சதவீதம் அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இப்போது ஒரு டன்னுக்கு ரூ.12,375 ஆக உள்ளது. இது ரூ.13,000 ஆக உயர்ந்துள்ளது. மத்திய விவசாய அமைச்சர் சரத்பவாருடன் ஆலோசனை நடத்திய பிறகு உணவு அமைச்சர் தாமஸ் இதை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ''மொத்த விலையில் வெங்காயம் இப்போது கிலோ ஸி15 வரை உள்ளது. குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை 5 சதவீதம் உயர்த்துவதன் மூலம் உள்நாட்டில் சில்லறை விற்பனை விலையை கிலோ ரூ.21 முதல் ரூ.22 ஆக பராமரிக்க முடியும்'' என்றார். பற்றாக்குறையான சூழ்நிலையில் தேவை அதிகரித்து விலை உயர்ந்தால், ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்படலாம் என்றும் மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

**சர்க்கரை உற்பத்தி அதிகரிப்பு கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : 9/7/2011 1:2:7



தாராபுரம் : திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பகுதியில் அதிகளவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இங்குள்ள விவசாயிகள், வெட்டப்பட்ட கரும்பை சர்க்கரை ஆலைகளுக்கு ஒப்பந்தம் போடாமல் தாங்களாவே ஆலை அமைத்து உருண்டை வெல்லம், சர்க்கரை உற்பத்தி செய்து வருகிறார்கள். வெல்லத்தை தனியார் மண்டிகளிலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் விற்பனை செய்து வருகின்றனர்.

வெல்லம், சர்க்கரை உற்பத்திக்கு கூலி ஆட்கள் கிடைக்காததால் சேலம், தர்மபுரி, மேச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டு, அவர்களுக்கு சாலை அமைத்து கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. இவ்வாறு ஆலை பணிக்காக வந்தவர்கள் ஆடி மாத திருவிழாவிற்கு சொந்தஊர் சென்றிருந்தனர்.
இதனால் கடந்த ஒரு மாதமாக வெல்லம் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்பு, சொந்த ஊர் சென்ற தொழிலாளர்கள் தாராபுரம் திரும்பினர். வெல்லம், சர்க்கரை உற்பத்தி தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் அலங்கியத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 30 கிலோ எடை கொண்ட உருண்டை வெல்லம் 520 சிப்பமும், சர்க்கரை 250 மூட்டைகளும் விற்பனைக்கு விவசாயிகளால் கொண்டுவரப்பட்டிருந்தது. இதில் உருண்டை வெல்லம் அதிகபட்ச விலையாக ரூ.819க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.787க்கும் ஏலம் போனது. சர்க்கரை அதிகபட்சமாக ரூ.865க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.740க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ.6.10 லட்சத்திற்கு ஏலம் போனது.
இத்தகவலை, ஒழுங்குமுறை விற்பனைக்கூட மேற்பார்வையாளர் மகுடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.